[2024 பிப்ரவரி 21

நினைக்கிறார்கள். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் உடனடியாக முடிவெடுக்க முடியவில்லை. இதை எப்படிச் செய்தால் சரியாக வரும், நீதிமன்ற தடையாணை இல்லாமல் எப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

35—

கொள்முதல் நிலையம்

***3017—திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மிளகு, காப்பி மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றிற்கான கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

S.N. 210, கொல்லிமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, சங்க உறுப்பினர்களிடமிருந்து மிளகு, காப்பி போன்ற வேளாண் விளைபொருட்கள் நியாயமான விலைக்குக் கொள்முதல் கமிட்டி மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, புதிதாக ஒரு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அதிகப்படியாக மிளகு மற்றும் காப்பி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அப்படி உற்பத்தி

2024 பிப்ரவரி 21]

செய்யப்படுகின்ற விளைபொருட்களை S.N.210 கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, குறைந்த அளவில் கொள்முதல் செய்கிறார்கள். இக்காலகட்டத்தில் அதிகப்படியான மிளகு இருப்பு வைக்கின்ற நிலை ஏற்படுகிறது. அதனால், கொள்முதல் நிலையம் அமைத்தால் விவசாயிகளுக்கு உரிய விலைகள் கிடைக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அது செயல்பாட்டில் இருக்கின்ற காரணத்தால், பொருட்களின் உற்பத்தி அதிகமாக இருப்பின், தேவைக்கேற்றவாறு அதை விரிவுபடுத்தலாம். புதியதாக ஒரு கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை மிளகு மருத்துவ குணம் கொண்டது. உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவிக்கொண்டிருந்த காலகட்டத்தில்கூட கொல்லிமலையிலே அதிகளவில் பாதிப்பு ஏற்படவில்லை. ஆகவே, டெல்டா விவசாயிகளுக்கு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதுபோன்று, கொல்லிமலையிலே மிளகு சாகுபடி, மரவள்ளிப் பயிர்களுக்கு கொள்முதல் நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விடையை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், சபைக்கும் தருகின்றேன்.*

[2024 பிப்ரவரி 21

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல சிறப்பான வகையில் மிளகு கொள்முதல் செய்யப்படுகிறது. காப்பி போன்ற பொருட்களை அவற்றின் தரம், ஈரப்பதம் ஆகியவற்றைப் பரிசோதித்து உரிய முறையில் நியாயமான விலைக்கு கொள்முதல் கமிட்டி மூலமாக விவசாய உற்பத்திக் குழுக்கள், அதாவது FPO மூலமாக மிளகு மற்றும் காப்பி கொள்முதல் செய்யப்படுகின்றன. அப்பொருட்கள் சங்கத்தில் உள்ள பதப்படுத்தும் ஆலையின் மூலமாகப் பதப்படுத்தப்பட்டு, மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றப்பட்டு, தரமாக packing செய்யப்பட்டு, கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மற்றும் Tampcol ஆகிய நிறுவனங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–45

இச்சங்கத்தின் உறுப்பினர்கள் விளைவிக்கும் மரவள்ளிக் கிழங்கினைப் பொறுத்தவரையில், சோளக்காடு கொள்முதல் மையம் மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு, Sago ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால், தற்போது காபி, மிளகு, அன்னாசி மற்றும் வாழை உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்படும் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. எனவே, மரவள்ளி சாகுபடி செய்கின்ற விவசாயிகள் பரப்பளவைக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே, மேற்படி கொல்லிமலைப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் பரப்பளவு குறைந்ததாலும், ஆலை அதிபர்கள் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும் கொல்லிமலையில் மரவள்ளிக் கிழங்கு கொள்முதல் நிலையத்தை உடனடியாக அமைக்க வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.